


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

கருப்பத் தூறிப் பிறவாதே
கனகப் பாடுற் றுழலாதே
திருப் பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாவித் தருள்வாயே
பரப் பற்றாருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே

திருஞானசம்பந்தர் குருபூஜை தினம் : வைகாசி மூலம்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும் நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ அருத்தமின்ப மென்றிவை
முற்றம்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென்மு கம்மனே.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் றிரு நீறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்
2007 வியய வருடம் ஆனி, ஆடி

மலர் 55

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல, QD/74/NEWS/2006Y}


## இந்து சமயம் தொடர்பான சட்டம் உருவாக்கப்பட வேண்டும்

இலங்கையில் இந்து ஆலயங்கள் தொடர்பான விதிமுறைச் சட்டம் இதுவரை சட்ட ஒழுங்கில் இல்லாமை பெரும் குறைபாடாகும். பௌத்த மதத்துக்கும் இஸ்லாமிய மதத்துக்குமான சட்டதிட்டங்கள் இலங்கை சட்ட ஒழுங்கில் இணைக்கப்பட்டுள்ளன. இதுவரை இந்து ஆலயங்களுக்கான நிலையான சட்டப்பிரமாணம் இல்லாமையால் ஆலயங்களின் வழக்குகள் உயர் நீதிமன்றம் வரை வழக்காடப்பட்டு காலம் கழிகின்றன. இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன்விழா நிறைவு நாளில் சிறப்புரை ஆற்றிய நீதியரசர் எஸ். சிறீஸ்கந்தராஜா தமது உரையில் எடுத்துரைத்தார். நீதியரசரின் உரை மிகவும் காத்திரமாக அமைந்தது.

இந்து நிறுவனங்கள் ஒன்றிணைந்து சட்டக் கோவை ஒன்றைத் தயாரித்து பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்க தவறிவிட்டன. இதனால் இந்து ஆலயங்கள் தொடர்பான வழக்குகளைத் தீர்ப்பதில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. சரியான சட்ட வரையறை இல்லாத காரணத்தால் ஏற்கனவே தீர்க்கப்பட்ட வழக்குகளின் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆலய வழக்குகள் சில தீர்க்கப்பட்டு வருகின்றன. இந்நிலை மாற வேண்டும். இந்து ஆலயங்களில் தனித்துவமான சட்டதிட்டங்கள் இந்துக்களால் உருவாக்கப்பட வேண்டும். அகில இலங்கை இந்து மாமன்றம் போன்ற நிறுவனங்கள் வெகு விரைவில் இம் முயற்சியில் ஈடுபட வேண்டும். ஆலயங்கள், சமய நிறுவனங்களை நிர்வகிப்பவர்களுக்கு இந்துமத சட்டக் கோவை யாப்பு உருவாக்கப்பட்டு வழிப்படுத்தினால் இந்து நிறுவனங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறைவடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புண்டு எனக் குறிப்பிட்டார். மேலும் நீதியரசர் தமது உரையில் இலங்கையில் உள்ள இந்துசமயம் சார்ந்த கல்வெட்டுக்களை பாதுகாக்கும் முயற்சியில் இந்து பரிபாலனங்கள் அக்கறை கொள்ள வேண்டும். பல புராதனமான கல்வெட்டுக்கள் அகற்றப்பட்டு விட்டன. உதாரணமாக அநுராதபுரத்தில் காணப்பட்ட எல்லாளன் ஞாபகார்த்த சின்னம் அகற்றப்பட்டு விட்டது. இதே போல் இராமாயண வரலாற்றோடு தொடர்புடைய சேது சமுத்திர வரலாற்று தகவல்கள் தற்போது ஒதுக்கப்பட்டு வருகின்றது. எனவே இந்து நிறுவனங்களை விழிப்பாக இருங்கள் என நீதியரசர் அவர்கள் உணர்வுபூர்வமாக ஆற்றிய உரை மிகவும் சிந்தனைக்குரியது.

இந்து சமயம் சுதந்திரமானது. அதற்குரிய சிறப்பே அச்சமயத்தவர்கள் தாம் விரும்பியவாறு வழிபாடு செய்வதற்கும் விரும்பிய மார்க்கத்தைப் பின் பற்றுவதற்கும் உள்ள உரிமை என்பர். நீதியரசர் வழிபாட்டுச் சுதந்திரம் பற்றியோ கடைப்பிடிக்க வேண்டிய மார்க்கம் பற்றியோ கூறவில்லை. மிகவும் நிதானமாக இந்து ஆலய நிர்வகிப்பு பற்றியும் இந்த நிறுவன கட்டமைப்புப் பற்றியும் மிகவும் அனுபவம் வாய்ந்த நீதியரசர் கூறிய கருத்துக்கள் அர்த்தமுள்ளவை. இம் மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற எம் இனத்தின் விடிவுக்கான போராட்டத்திற்கு மத்தியில் இந்து ஆலயங்கள் தொடர்பான வழக்குகள் அதிகரித்துச் செல்வது கவலைக்குரியது. இந்துக்களுக்கான சீரான சட்ட வரையறை இல்லாத காரணத்தால் நீண்ட நாட்களாக இந்து ஆலய வழக்குகள் தாமதிப்பது உணரக் கூடியதாக உள்ளது. இந்துமத பெரியோர்கள் இந்து நிறுவனங்கள் விரைவில் ஒன்றுகூடி நீதியரசரின் கருத்துக்கு மதிப்பளிப்பது அவசியமாகும். ஆலயங்களும், சைவ நிறுவனங்களும் சிறப்பாக நடைபெற முயற்சி செய்வோமாக.


உங்கள் அபிமான "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்:
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் அற்புதக் கந்தன் உற்சவ நாட்கள்

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி. J.P

"ஐந்து முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா என்றோது வார முன்"

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்குபவன் முருகப் பெருமான். மாவிட்டபுரம், நல்லூர், சந்நிதி, கதிர்காமம் ஆகிய தலங்களிலே உற்சவம் நடைபெறுகின்ற நாட்கள் வந்துகொண்டிருக்கின்றன. மாருதப்புரவீக வல்லியினதும், நகுலமுனிவரதும் வரலாற்றுச் சிறப்பு மாவிட்டபுரத்துக்கு உண்டு. ஆடி அமாவாசை தினத்தைப் பூர்த்தியாகக் கொண்டு 25 தினங்கள் உற்சவம் நடைபெறுகின்ற தலம் மாவிட்டபுரம் ஆகும். அந்தண சிரேட்டர்களாலும், சிவாச்சாரியப் பெருமக்களாலும் சிறப்புப் பெறுகின்ற தலம் இதுவாகும். இடம்பெயர்ந்து மல்லாகம் பதியை தற்காலிக வாழ்விடமாகக் கொண்டாலும் தினமும் தானும், தனது சகாக்களும் மாவிட்புரம் ஆலயத்துக்குச் சென்று பூசைகள் அபிஷேகங்கள் நடாத்தி வருகிறார் மஹாராஜஸ்ரீ. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள். இவருடைய தமிழ்ப்புலமை, ஆங்கிலப் புலமை மிகவும் மெச்சுதற்குரியது. தற்போது மேற்படி ஆலயத்தில் திருப்பணி வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. கூடிய விரைவில் கந்தப் பெருமானுடைய குடமுழுக்கு விழாவைக் கண்ணாரக் கண்டு நிறைவு கொள்ள வேண்டும் என்பது அடியார்களின் பேரவா. எம் மண்ணில் மிகத் தொன்மை வாய்ந்த முருகஸ்தலம் என்ற சிறப்பு மாவிட்டபுரத்துக்கே உரியது. இவ்வாலயத்தை மையமாகக் கொண்டே எம் பிரதேச கலைப் பாரம் பரியம் வளர்ச்சி பெற்றுள்ளது. கந்தபுராணத்தின் மேன்மைபல எம்மக்களுக்கு எடுத்துரைத்த ஆலயம். பண்டிதர்கள் பாவலர்கள் கூடிப் புராணப் படிப்பினை இவ்வாலயத்தில் வளர்த்தெடுத்தனர். இப்புண்ணிய தலத்தை தரிசித்து வாழ்வில் அனைவரும் புனிதமடைவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஈழ மண்டல சதகம்

## பாடல்

தத்துவமசி வாக்கிய முணர்ந்தமா முனிமகா
சங்கற்ப மோதியுதவச்
சால்சமுத் திரசங்க மத்தின்விதி சூழ்கியெழு
தையன்மா முகமுந்தவிர்
சித்தஞ்சி வன்றிரு வடிக்கணைக் குருகிடச்
செந்திருவை நிகர்நன்முகச்
செவ்விபெற் றேகுவாள் சிந்தைமகிழ் வெம்மனோர்
செப்புந் திறத்ததாமோ
புத்தமுத மொழிபின் புரிந்துநாட் கடனெழீ இப்
பொற்கோயி லிற்புகுந்தெம்
புண்ணியனை நகுலையைக் கண்ணுறக் கண்டடி
புகழ்ந்ததன் பினிற்பணிந்தாள்
சத்தசத் தொடுதனிச் சதசத்து மாகியொளிர்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.

பாரிற் பணிந்தெழுமந் நாரிமா ருதவல்லி
பரமனைப் பரையைமுனியைப்
பகர்பெருந் தீர்த்தை யொருசிறிது நீங்கலாள்
பாசுரம தொன்றெழுதியார்த்
தாரிற் றிகழ்ந்துநிகழ் தந்தைக் குணர்த்தவத்
தந்தைதன் னுளமகிழ்ந்தே
தானதரு மங்கள் பல செய்தறு முகன்றிருச்
சட்டகந் தருவித்ததை
வாரிற் றிணிந்தமுலை மாதுக் கனுப்பநா
வாயினது வந்துறுதலும்
வாங்கியோங் குளமகிழ்வு தோங்கிநகு லாசல
வளாகபூ ருவதிசையின்வாய்
சாரிற் பலாதனது வேரிற் பழுக்கவருள்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தெழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.

**உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# ஆடிச்சோதி

# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி. J.P

**"பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா**
**எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணை நல்லூரருட்டுறையுள்**
**அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே"**

அவனருளே கண்ணாகக் கொண்டு அவனைக் கண்டவர்கள் நாயன்மார்கள். அந்த அனுபவத்தையே திருமுறைகள் எடுத்துக் காட்டுகின்றன. பன்னிருதிருமுறைகளில் ஏழாவது திருமுறையே சுந்தரர் செந்தமிழாகும். 'சொற்றமிழ் பாடு' என்று இறைவனே சுந்தரரைக் கேட்டுப் பாடியுள்ளார் என்பதைப் 'பெரியபுராண'த்தால் அறிகிறோம். திருமணப் பந்தலிலே வைத்துத் தடுத்தாட்கொண்ட பெருமான் திருவெண்ணெய் நல்லூரிலே திருவருட்துறை என்னும் கோயிலுள்ளே சென்று மறைந்தருளியவுடன், அதிசயித்து நின்றார் நம்பியாரூரர். உடனே எம்பெருமான் அசரீரியாக 'முன்பு நீ எனக்குத் தொண்டன், நம் ஏவலாலே மணமீது பிறந்தாய், துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடராமல் தடுத்தாட் கொண்டோம்' என மொழிந்தருளினார். இவ்வோசையைக்கேட்ட நம்பியாரூரர், ஈன்ற ஆன்கனைப்புக் கேட்ட கன்றுபோற் கதறி நின்று கைகளைத் தலையின்மேற் குவித்து வணங்கி நின்றார். பின்னும் அசரீரியாக மொழிகின்றார் எம்பெருமான்.

**"மற்றுநீ வன்மைபேசி வன்றொண்டன் என்னும் நாமம்**
**பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க**
**அர்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்**
**சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்"**

இவ்வருள் மொழியைச் செவிமடுத்த நம்பியாரூரர் 'கோதிலா அமுதே இன்றுன் குணப்பெருங் கடலை நாயேன் யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன்' எனக் கேட்டபொழுது 'பித்தன் என்றே பாடுக' என்றார் எம்பெருமான். அவர் வாக்கை அருள் வாக்காகக் கொண்டு 'பித்தா பிறை சூடி' எனத் தொடங்கிப் பாடியருளினார். முதற் பாடலாகிய இப்பாடலிலேயே 'எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை வைத்தாய்' எனப் பாடி இறைவனுக்கும் தமக்குமிடையேயமைந்த யோக மார்க்கத்தை விளங்க வைத்துள்ளார். திருவெண்ணெய் நல்லூரிலிருந்து புறப்பட்டுத் தில்லைக்குச் சென்று வழிபாடுகள் நடத்தி வருங்கால் 'திருவாரூருக்கு வா' என்று அழைத்து 'தோழனாக என்னை உனக்குத் தந்தேன்' எனவும் அருளினார் எம்பெருமான். சுந்தரர் இறைவனோடு கொண்டுள்ள இந்தத் தோழமைத் தொடர்பு பேச்சு உரிமைக்கு மிக வாய்ப்பான தொடர்பாகும். சம்பந்தப்பெருமான் இறைவனோடு புத்திரன் என்ற முறையில் தொடர்பு கொண்டவராகையால் தகப்பன் பிள்ளைக்கு உணர்ந்து செய்யும் முறையிலே யாவும் கிடைத்தன. வாதாட இடமில்லை, முறையுமில்லை. அப்பர்சுவாமிகள் அடியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற முறையிலே தாழ்மையான வேண்டுகோள்களையே விடுவித்தார். மணிவாசகப்பெருமான் சீஷன் என்ற பாங்கிலே பிரிவாற்றாமையால் அலறியும், உழுறியும் வேண்டுகோளை விடுவித்து இரங்குகிறார். ஆனால் சுந்தரரோ தோழன் என்ற முறையிலே எம்பெருமானோடு தொடர்பு கொண்ட தன்மையினால் எப்பொருள்களையும் வலியுறுத்திக் கேட்டுப் பெற்றுமிருக்கிற தன்மையைக் காணலாம்.

ஒருவருடைய பெருமையையும் குணத்தையும் அவரவர்களுடைய நண்பர்களைக் கொண்டு சொல்லிவிடலாம் என்பது பெரிய உண்மை. சிவபெருமான் சுந்தரரிடத்துத் தோழமை கொள்ள வந்தாரென்றால் சுந்தரரின் பெருமைக்கு வேறுசான்றே தேவையில்லை. சுந்தரரின் செந்தமிழ்ப் புலமை எம்பெருமானை ஈர்த்துவிட்டது என்பதை அருணகிரிநாதர் விளக்குகிறார்.

**"கற்ற தமிழ்ப்புல வனுக்கு மேமகிழ்**
**வுற்றொரு பொற்கொடி களிக்க வேபொர**
**கற்பனை நெற்பால அளித்த காரண னருள்பாலா"**

என்பது திருப்புகழ். இவருடைய செந்தமிழை நயந்ததனாலேயே எம்பெருமான் பரவையாரிடமும் ஒரு முறைக்கு இருமுறை தூது சென்றார் எனவும் அறிகிறோம். பிழை பொறுத்தருளும் பெற்றி வாய்ந்த எம்பெருமானைத் தோழமையாகக் கொண்ட சுந்தரர் வியந்து பாடுகிறார்.

**"......................அடியேற் கெளிவந்த**
**தூதனைத் தன்னைத் தோழமை யருளித்**
**தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்**
**நாத னைநள் ளாறனை அமுதை**
**நாயி னேன்மறந் தென்நினைக் கேனே"**

என்பது தேவாரம். திருவாரூர்ப் பெருமானே அடி எடுத்துக் கொடுக்க திருத்தொண்டர் தொகையும் பாடியருளினார் சுந்தரர். இதுவே 'பெரியபுராண'ந் தோன்றுவதற்கு முதல் நூலாக அமைந்தது. இதனைக் குறித்துச் சுந்தரருக்குப் 'பெரியபுராண'த்தில் பல இடங்களில் நன்றி செலுத்துகிறார் சேக்கிழார். 'தம்பிரான் தோழரவர் தாமொழிந்த தமிழ்முறையே எம்பெருமான் தமர்கள் திருத்தொண்டேத்த லுறுகின்றேன்' என்றும் 'ஈசனடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்து தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணிந்த திருவாளன் வாச மலர்மென் கழல் வணங்க வந்த பிறப்பை வழுத்துவாம்' என்றும் பாடியுள்ளார்.

சுந்தரர் செந்தமிழில் மற்றைய புலவர்களுக்கெல்லாம் ஒரு புதுவழி காட்டப்படுகிறது. பொருள் வேண்டிப் பரவவலர்களையும், வள்ளல்களையும் பாடினார் சங்கச்சான்றோர். ஆனால் பொருளையும், அருளையும் வேண்டி எம்பெருமானைப் பாடும்படி வழிகாட்டுகிறார். சுந்தரர் 'மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக் கிவனென்று கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங் கொடுப்பாரில்லை'என்று நொந்து கொள்கிறார். காரணம் பல்லவர் காலத்து மன்னர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கவில்லை. அதனாலேயே ஒரு புதிய வழியைத் திறந்து காட்டுகிறார்.

'புலவர்களே; உண்ண உணவும் உடுக்கக் கூறையும் துன்பநீக்கமும் இம்மைக் கருளுவான்; மறுமைக்குச் சிவலோகப் பெரும் பேற்றையும் நல்குவான்.' எனவே அவனையே பாடுங்கள் என்பது நாயனார் அறிவுரையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தானகுரவர்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**

சிவம் அன்பு சம்பந்தமானது, சைவம் சிவம் சம்பந்தப்பட்டது. சைவசமயம் அன்பு நெறியாக மலர்ந்து சைவமக்களின் உலகியல் மற்றும் ஆன்மிக வாழ்க்கையை நெறிப்படுத்துகிறது.

தமிழர் சமயம் சைவசமயம். தமிழர்களின் தத்துவம் சைவசித்தாந்தம். அந்த வகையில் சைவம் அறிவு நெறியாகவும் விளங்குகிறது.

அன்பு நெறியைப் பக்தி நெறியாக வளர்த்தவர்கள் சைவ நாயன்மார்கள். அவர்களுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் சமய குரவர் என அழைக்கப்படுகின்றனர். தேவாரம், திருவாசகம் ஆகிய இரண்டும் தமிழ் வேதம் ஆகும்.

“நாலுபேர் சொன்னபடி நட” என்று மூத்தோர் அறிவுரை கூறுவதைக் கேட்டுள்ளோம். “நாலுபேர்” என்பது சமய குரவர் நால்வரைக் குறிக்கின்றது.

சைவ நாயன்மார்கள் தோத்திரங்களை வழங்கி சைவநெறியைப் பக்தி நெறியாக மலர்ச்சி பெறச் செய்தனர். பன்னிருதிருமுறைகள் தோத்திர நூல்கள். அதற்குப் பின்னரும் அருளாளர்கள் தோத்திர நூல்களை இயற்றியுள்ளனர்.

பன்னிருதிருமுறைகள் தெய்வீகத் தன்மையுடையவை. சிவபெருமான் உள்நின்றுணர்ந்த நாயன்மார்களால் அருளப் பெற்றவை.

சைவத்தின் அறிவுநெறியை வளர்த்தவர்கள் சந்தானகுரவர் எனப்படுவர். சைவசித்தாந்த சாத்திர நூல்களை அருளிய குருபரம்பரையினரைச் “சந்தானகுரவர்” என அழைக்கின்றோம்.

சைவத்தின் முடிந்த முடிவான உண்மைகளை விளக்கும் மெய்யியல் நூல்கள் சைவசித்தாந்த சாத்திரங்கள் ஆகும். அவை பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் என்றும் அவற்றை அழைப்பர்.

சந்தான குரவர்கள் இருவகைப்படுவர், ஒன்று அகச்சந்தான குரவர் மற்றையது புறச்சந்தான குரவர். திருக்கைலாயமலையிலே எழுந்தருளியிருந்தவர்கள்,அகச்சந்தான குரவர் என்றும் தமிழ் நாட்டிலே அந்த ஞானபரம்பரையினரைத் தொடர்ந்து சாத்திர நூல்களை இயற்றி உபதேசம் செய்தவர்கள் புறச்சந்தான குரவர் என்றும் அழைக்கப்படலாயினர். திருநந்திதேவர், ஸ்ரீகண்டபரமசிவன் தட்சிணாமூர்த்தியாகித் திருக்கைலாய மலையின் கண்ணே உள்ள கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து வேதாகமங்களின் மெய்ப்பொருளை உணர்த்தியபோது, நேரடியாக மெய்யனுபவம் பெறும் பேற்றினைப் பெற்றவர். திருநந்திதேவரின் தலை மாணாக்கர் சனற்குமாரமுனிவர். சனற்குமாரரின் மாணாக்கர் சத்திய ஞான தரிசினிகள் தமது மாணாக்கராகிய பரஞ்சோதிமா முனிவருக்குத் தாம் பெற்ற மெஞ்ஞான அனுபவங்களை உபதேசித்தார். திருநந்திதேவர் முதல் பரஞ்சோதிமுனிவர் வரை உள்ள நால்வரும் அகச்சந்தானகுரவர் ஆவர்.

பரஞ்சோதிமா முனிவரிடமிருந்து ஞானோபதேசம் பெற்ற மெய்கண்டதேவர் என்பார் தமிழ் நாட்டில் பிறந்தவர். அவரின் தந்தையார் அச்சுதக்களப்பாளர். தமக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைச் செல்வம் கிடைக்கப் பெறாமையால் குலகுருவாகிய சகலாகமபண்டிதரிடம் சென்று குறையைத் தெரிவித்தார். தேவாரத் திருமுறைகளில் திருக்கயிறு சாத்துவித்துப் பார்த்தபோது, திருஞானசம்பந்தர் அருளிய திருவெண்காட்டுப் பதிகத்தின் இரண்டாம் பாடல் காணப்பட்டது.

திருவெண்காட்டுத் திருக்கோயில் சுற்றிலுமுள்ள மூன்று குளங்களிலும் நீராடிச் சிவபெருமானை வழிபடுகிறவர்களைப் பேய் அணுகாது, முன் அணுகியிருப்பினும் நீங்கும். தங்கள் உள்ளத்தில் நினைத்த பிள்ளைப்பேறு முதலிய சிறந்த பேறுகளையும் நினைத்த வண்ணம் தப்பாமல் அடைவர் - இதுவே அத்தேவாரப் பாடலின் பொருளாகும்.

அச்சுதக்களப்பாளர் அந்த ஆணைப்படி திருவெண்காட்டுக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டு வருங்காலத்தில் ஞானசம்பந்தன் போன்ற நற்புதல்வன் ஒருவன் கிடைக்கப் பெற்றான். அக்குழந்தைக்கு இறைவன் பெயராகிய சுவேதவனப்பெருமாள் எனப் பெயரிட்டனர்.

இரண்டு வயது நிறைவு பெற்றபொழுது பரஞ்சோதிமாமுனிவர் அகத்தியமாமுனிவரைச் சந்திக்கச் செல்லும் வழியில் இக்குழந்தை அருளொளிப்பிழம்பாகத் தோன்றியமையைக் கண்டு தமிழுலகம் உணர்ந்துய்யும் பொருட்டு சிவஞானபோதத்தைக் கொடுத்தருளினார். அக்குழந்தைக்கு மெய்கண்டார் என்னும் திருப்பெயரையும் சூட்டினார். பரஞ்சோதிமுனிவரின் குருவாகிய சத்தியஞானதரிசினிகள் என்பதன் தமிழ் வடிவம் மெய்கண்டார் என்பதாகும். மெய்கண்டார், சிவஞானபோதம் என்னும் சைவசித்தாந்த நூலைத் தந்தருளினார்.

அச்சுதக்களப்பாளரின் குல குருவாகிய சகலாகம பண்டிதர் சிறு பிள்ளையாகிய மெய்கண்டாரிடம் வந்தார் அப்போது மெய்கண்டார் தமது மாணாக்கர்களுக்கு ஆணவமலம் பற்றி விளக்கமளித்துக் கொண்டிருந்தார் சகலாகமபண்டிதர் மெய்கண்டாரை நோக்கி, அகந்தை நிறைந்த தொனியில் ஆக்ரோசத்துடன் "ஆணவமலம் என்றால் என்ன?" என்று வினவினார். மெய்கண்டார் தமது சுட்டு விரலால் சகலாகமபண்டிதரைச் சுட்டிக் காட்டிப் புன்னகைத்தார். சகலாகம பண்டிதர் தன்னையுணர்ந்தார், தன்நாமம் கெட்டார், மெய்கண்டாரை வீழ்ந்து வணங்கித் தன்னை மாணாக்கனாக ஏற்று அருளுபதேசம் செய்தருளுமாறு வேண்டி நின்றார்.

மெய்கண்டார் அவருக்கு 'அருணந்திசிவம்' என்னும் திருப்பெயரைச் சூட்டித் தன் மாணாக்கனாக ஏற்றுக் கொண்டார். சிவஞானபோதம் என்னும் மெய்கண்டாரின் நூலை முதல் நூலாகக் கொண்டு, அருணந்திசிவாச்சாரியார் 'சிவஞானசித்தியார்' என்ற விரிவான சித்தாந்த சாத்திரநூலைச் சைவத்தமிழுலகிற்கு நல்கினார்.

"சிவத்தின் மேல் தெய்வமில்லை, சிவஞானசித்திக்குமேல் ஒரு சாத்திரமில்லை" என்னுங் கூற்று சிவஞானசித்தியார் நூலின் அருமையையும் பெருமையையும் எடுத்துக் காட்டுகிறது. கல்விகரையிலது, முதுமையிலும் கல்வி கற்கலாம், பயன் மிக்க நூல் செய்யலாம் என்பவற்றை அருணந்திசிவாச்சாரியார் வரலாறு சுட்டிக்காட்டுகிறது. இருபா.'. இருபது அவரின் மற்றொரு சித்தாந்தநூல்.

மறைஞான சம்பந்தர், அருணந்திசிவாச்சாரியாரின் தலை மாணாக்கர் ஆவார். வேதநெறி, சைவாகமநெறி துறைபோகக் கற்றவர். ஞானமார்க்கத்தில் நின்று சிறிது காலம் மௌன விரதம் அனுட்டித்தவர். அந்தண குலத்தவர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களோடு மக்களாக எளிய வாழ்வு வாழ்ந்தவர். திருக்காளஞ்சேரியில் ஞான விளக்கம் தமது மாணவர்களுக்கு அளித்து வந்தவர். சாதி குல பேதம் பாராட்டாது சைவநெறிக்கு ஏற்ற வகையில் தூய்மையான எளிய வாழ்வு வாழ்ந்து காட்டிய மகாஞானியாக விளங்கியவர் மறைஞான சம்பந்தர். அவரது வாழ்க்கையையே ஒரு நூலாகக் கொள்ளப்படுகிறது. வேறு நூல்கள் எதையும் அவர் ஆக்கவில்லை. உமாபதிசிவம் அவரிடம் ஞானவிளக்கம் பெற்றவர்.

உமாபதிசிவாச்சாரியார், தில்லைவாழ்அந்தணர் குலத்தவர். வேதாகமங்களையும் சைவத்தமிழ் நூல்களையும் கற்றறிந்தவர். சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குப் பூசைகளை நிறைவேற்றிவிட்டு சிவிகையில், கொடி, குடை, ஆலவட்டம், தீவர்த்தி, அடியாள்கள் சகிதம் தமது கொன்றவன்குடி இல்லம் நோக்கி, உமாபதிசிவம் சென்றுகொண்டிருந்தபோது ஞானி ஒருவர் தமது சீடர்களுக்கு அவரைச் சுட்டிக்காட்டிப் "பட்ட கட்டடையில் பகற்குருடு போகிறது" என்று, அஃறிணைப் பொருளாகப் பாவித்துக் கூறுவதைக்கேட்டார். அந்த ஞானியே மறைஞானசம்பந்தர்.

அக்கூற்றினைக்கேட்ட உமாபதிசிவம், தற்பெருமையெல்லாம் நீங்கப்பெற்றவராய், மறைஞானசம்பந்தரின் அருட்திறத்தை உணர்ந்தார். அவரையே தம் குருவாக ஏற்றுக்கொண்டார்.

உமாபதிசிவத்தின் பக்குவ நிலையைச் சோதிக்க விரும்பிய மறைஞான சம்பந்தர், நெசவாளர் ஒருவரிடம் கூழ்வாங்கிப் பருகினார். அவரின் கையிலிருந்து வழிந்துவந்த கூழை உமாபதிசிவம் ஏந்திப் பருகினார். மறைஞான சம்பந்தர் இச்செயலூடாக உமாபதிசிவத்தின் பக்குவ முதிர்ச்சியை உணர்ந்து, அவருக்கு சிவதீட்சை வழங்கித் தமது மாணாக்கராக்கினார்.

இதனையறிந்த தில்லைவாழ் அந்தணர்கள், உமாபதிசிவத்தை நடராஜப்பெருமானுக்குப் பூசை செய்ய விடாது தடுத்தனர். கொன்றவன்குடி என்னும் சிற்றூரில் திருமடம் அமைத்து அங்கு வாழ்ந்துவந்தார்.

அந்நாளில் சிதம்பரத்தில் நடந்த கொடியேற்ற விழாவில் கொடியேறாமல் தடையேற்பட்டது. உமாபதிசிவாச்சாரியார் அங்கு இல்லாமையே காரணம் என்று அறிந்த தில்லைவாழ் அந்தணர்கள் அவரை அழைத்து வந்தனர். உமாபதிசிவம் கொடிக்கவி பாடினார் ஏறாது தடைப்பட்ட கொடி ஏறியது. உமாபதிசிவத்தின் பெருமை தில்லைவாழ் அந்தணர்களுக்கு வெளிச்சமாயிற்று.

உமாபதிசிவாச்சாரியார், தாழ்ந்த சமூகத்தைச் சேர்ந்த பெற்றான்சம்பானுக்கு இறைவன் திருவுள்ளப்படி முத்தியளித்தார். இது சமூகரீதியாகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது உமாபதிசிவம் நயனதீட்சை மூலம் முள்ளிச் செடிக்கு முத்தியளித்து ஆன்மீக சமத்துவத்தை நிலைநாட்டினார். சைவநெறியில் சாதிபேதம், குலபேதம், உயர்திணை-அஃறிணை வேற்றுமை, பால் வேற்றுமை எதுவும் கிடையாது என்பதும் குறிப்பிடத் தக்கது. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வள்ளுவர் வேதம் சைவத்தில் உறுதிபெற்றுள்ளது. ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம். மெய்கண்டதேவர், அருணந்திசிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாச்சாரியார் ஆகியோரே சந்தானகுரவர் நால்வரும் ஆவர். சைவத்தின் சாத்திர நூல்களைத் தந்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் எனும் தோணி பற்றி......!

கவிஞர், கல்வயல் வே. குமாரசாமி அவர்கள்

**"மனம் எனும் தோணி பற்றி மதி எனுங் கோலை ஊன்றிச்**
**சினம் எனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும் போது**
**மதன் எனும் பாறை தாக்கி மறியும் போது அறிய ஒண்ணாது**
**உனை உனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடையகோவே"**

என்பது திருநாவுக்கரசர் பெருமானின் தேவாரம். இதனைப் படிக்கும் போதெல்லாம் மனம் எனும் தோணிபற்றி என்னுள் எழுந்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

மனம் பற்றிப் பேச விளைகின்ற வேளை வள்ளுவப்பெருமானின் உள்ளத்தெழுந்த,

**"தனக்கு உவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது"**

என்ற குறள்பாவும்,

**"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்**
**எண்பது கோடி நினைந்து எண்ணுவன - கண் புதைந்த**
**மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம் போலச்**
**சாத்துணையும் சஞ்சலமே தான்"**

என்ற பழந்தமிழ் மூதாட்டி ஔவைப் பாட்டியின் நல்வழிப் பாடலும் மின்னலிடுகின்றன. மனம் என்றால் என்ன? அதற்கும் மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்புகள் எவை? என்ற பலப்பல கேள்விகள் ஒன்றன் பின் ஒன்றாக எழுகின்றன. ஞானிகளும் சித்தர்களும் தத்துவமேதைகளும் கூட இந்த மனதைப் பற்றி மிகவும் சிலாகித்துச் சொல்லி இருக்கின்றார்கள். மனம், வாக்கு, காயம் என வரும் வரிசையிலும் முதலிடத்திலே இது நிற்கின்றது. மனம் என்றால் உள்ளம். அப்படியானால் நினைவுக்கு இருப்பிடமானது தானே? இந்த மனசு தான் மனிதனின் மகோன்னதமான எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணியாகின்றது. ஆமாம், மனம் மனிதனை வழிநடத்தும் மூல இயந்திரம். இந்த மனசைக் கட்டிப் போடுகின்ற கெட்டித்தனத்தைத் தான் மன நெறி (Mental Dicipline) என்கின்றோம். இந்த மனத்தை நெறிப்படுத்துவது என்பது ஒரு மகத்தான கலை.

மனம் என்பது பல பிறவிகளும் பெற்ற வாசனை. வாசனையினாலே உருப்பெற்று வளர்கின்றமையால் ஞானிகள் இதனை, "வாதனைப் பழக்கத்தினால் மனம்" என்று குறிப்பிடுகின்றார்கள். மனத்திலே இறைவனது திருவடிகளைப் பதிய வைத்தால் நாம் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஓயாதே உள்குவார் உள்ளத்துள்ளான்"**

**'கருதுவார் மனத்துள்ளான்'**

என்ற சம்பந்தப் பெருமான் வாக்குகளும்,

**'உள்குவார் உள்ளத்தாய்'**

**'உள்குவார் உள்ளத்தானை'**

**'உள்குவார் உள்ளத்தில் உள்ளான் தன்னை'**

ஆகிய அப்பர் பெருமான் வாக்குகளும்,

**'நெக்கிறையே நினைவார் தனி நெஞ்சம் புக்குறைவான்'**

**'சிந்திப்பாரவர் சிந்தையுள்ளானை'**

ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமி வாக்குகளும் வலியுறுத்துகின்றன. இதனையே.

**"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடு வாழ்வார்"**

என்ற குறளுக்கு **"நினைப்பாரது உள்ளக் கமலத்தின் கண் விரைந்து சேரும் இறைவன்'** எனப் பொருள் விரித்தார் பரிமேலழகர்.

எங்கள் மனத்திலே எவை எவையெல்லாம் சேர்கின்றனவோ அவை அனைத்துமே நினைவு மயமாகத்தான் சேர முடியும். அந்நினைவும் கூட ஐம்புலன்களின் நுகர்ச்சியாகவே இருக்கம். உருவம், ஒலி, மணம், தொடுகை உணர்வு, சுவை ஆகியனவற்றையே மனம் நினைக்கும் இறைவனின் அழகைக் கண்ணாரக் கண்டு அதனை, பின்பு அவ்வடிவத்தை மனத்திலே நினைத்துப் பார்க்க முயலவேண்டும். இதனையே உள்முகதரிசனம் என்றும் தியானம் என்றும் குறிப்பிடுகின்றார்கள். அவ்வடிவம் மனக்கண்களிலே தெளிவாகத் தெரியத் தொடங்கினால் அதனைத் தாரணை என்பர். எங்கள் மனத்துக்கு இவ்வாற்றால் இருக்கின்றதா என்றால் இல்லை. ஆனால் இந்நிலையை எய்த முடியும்.

உண்மையிலே நடப்பது இதுதான். அதாவது விழிப்பு நிலையில் மனம் ஐம்புல வாசலைத் திறந்து வைத்திருக்கிறது. இதனையே,

**'ஐம்புல வேடரில் இயர்ந்தனை....'**

எனச் சிவஞானபோதம் சுட்டுகிறது. மனத்துக்கு நினைக்கும் ஆற்றல் இருக்கின்றதே ஒழிய, அந்நினைவைக் குறிப்பிட்ட ஒன்றில் நிலை நிறுத்துகின்ற ஆற்றல் நம்மில் பலருக்கு இல்லை. ஏனெனில் மனம் பலவற்றை நினைக்கும் தன்மை வாய்ந்ததாக இருக்கின்றமையே ஆகும். இவ்வைம்புல வாசல்களையும் எப்படி அடைக்கலாம் என்பதனை அறிந்து அத்திறமையைப் பெற்றுவிட்டோமானால் உள் முக தரிசனம் பெறுவது கடினமன்று.

திருவள்ளுவர் அடக்கம் உடைமையை, அதிகார வைப்பு முறைமையினை விளக்கும் பரிமேலழகர் இந்த நெறியைத்தான்,

**"மெய், மொழி, மனங்கள், தீ, நெறிக்கண் செல்லாது அடக்குதல் உடையன் ஆதல்"**

எனக் குறிப்பிடுகின்றார் என்று கருதக் கிடக்கின்றது. அஃதாவது இங்கு ஒவ்வொருவரும் உடலாலும், உரையாலும், உள்ளத்தாலும் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார். உடலாலே நற்செயலையும்-மெய்ம்மையையும், உரையாலே வாய்மையையும்-சத்தியத்தையும், உள்ளத்தாலே, வாக்கு உறுதியையும்-உண்மையையும் ஒழுக்காறாகக் கொள்ளுதல். இதனையே 'நன்னெறி' எனத் தொகுத்து உரைத்தனர் போலும் ஆன்றோர். இங்கே ஒழுக்காறாகக் கொள்ளுதல் என்பது ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் வழியாகக் கைக்கொள்ளுதல் என்பதாகும்.

இந்த மனம்தான் ஏனைய எல்லாவற்றையும் நெறிப்படுத்துதலில் முதன்மை வகிக்கின்றது. மனமே பொய்யையோ மெய்யையோ பேசத் தூண்டுகின்றது. ஆகவே ஏனையவற்றுக்குத் தலைமை தாங்கும் பக்குவத்தை மனம் பெற்றிருப்பதனை விளங்கிக் கொள்ளலாம். மனத்தை வசப்படுத்துகின்ற ஆற்றலை நாம் பெற்றுவிட்டோமானால் செயற்கரிய பெரிய காரியங்கள் பலவற்றைச் செய்துவிட முடியும்.

திருநாவுக்கரசர் பெருமான் கூறியதுபோல மனம் எனும் தோணியைக் கைப்பற்றி, பிடித்து அதிலே ஏறிக் கொண்டால் மட்டும் போதாது. மேலும் பல காரியங்களை நாம் சாதிக்க வேண்டும். இல்லையேல் நடுச்சமுத்திரத்திலே நின்று தத்தளித்துத் தடுமாறித் திண்டாட வேண்டிய நிலை நேரிடும். எங்கள் எல்லோருக்கும் நாம் நினைத்தன எல்லாமே நல்லபடி நிறைவேற வேண்டும் என்பது தானே விருப்பம். ஆகவே அத்தோணியைச் சரியான திசையிலே செலுத்த மதியாகிய துடுப்பை - சவளை - கோலைப் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். புரட்சிக் கவி சுப்பிரமணியபாரதியோ "நல்லவே எண்ண வேண்டும்" என்கிறார். வள்ளுவர் இதனையே, 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்கிறார்.

அப்பர் பெருமான் நாம் செலுத்தும் மனத்தோணி எங்கே, எப்படி நிற்கின்றதென்பதையும் கூறி எம்மை எச்சரிக்கையும் செய்கின்றார். நம் மனத்தோணி நிற்கின்ற இடத்தை செறிகடல் - அதாவது அந்த மாபெரும் சமுத்திரம் ஆழமும் அகலமும் செறியப் பெற்றது, அதிலே பயணிக்கும் போது எம் பயணத்தைத் தடுக்கும் மாமலை - கடற்பாறை அது தோணியையே தாக்கி அழித்து விடக் கூடியது. மதன் என்னும் பாறை அதிலே மோதியோ அல்லது மோதப்பட்டோ மேல் கீழாகவும் கீழ் மேலாகவும் நிலைகுலையும் போது உன்னை நினைக்கின்ற உணர்வைத் தந்தருள்வாயாக என்று இறைவனை யாசிக்கிறார் - வேண்டுகின்றார். அத்தோணியிலே ஏற்றியுள்ள சரக்கு - சினம் - அது சேர்ந்தாரைக் கொல்லி அது எப்படிப்பட்டதென ஏற்கனவே திருவள்ளுவர் சொல்லி விட்டிருக்கிறார்.

**"சினம் எனும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் எனும்**
**ஏமப் புனையைச் சுடும்"**

என்று இம்மனித மனம் பற்றிச் சொல்ல வந்த திருஞானசம்மந்தப் பெருமான் அதனோடு உரையாடிப் பார்க்கின்றார். இதனைப் புலவர் 'நெஞ்சோடு கிளைத்தல்' என்பர்.

**"நீ நாளும் நன்னெஞ்சே நினை கண்டாய்**
**யார் அறிவார் சா நாளும் வாழ் நாளும்"**

எனப் பெரியதோர் கேள்வியைக் கேட்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதமனம் பால் போன்றது. பால் அதிக சத்துக்கள் நிறையப் பெற்றிருந்தாலும் பழுதடைந்து விட்டால் அதனைப் போன்ற நஞ்சு வேறொன்றில்லை. அதேபோல் மனத்தால் வாழ்வை மேம்படுத்துகின்றவன் மனிதன். இந்த மனித மனம் கெட்டால் இந்த உலகம் முழுவதுமே கெட்டுப்போகும். இதனால் இரண்டு மாபெரும் நட்டம். ஒன்று உலகம் கெட்டுப்போகின்றது, மற்றையது நாமும் கெட்டொழிந்து போய்விடுகின்றோம். **"தீதும் நன்றும் பிறர் தர வருவதில்லை"**. நாமே நமக்குச் சுற்றமும் விதிவகையும் ஆகிவிடுகின்றோம்.

ஆராய்ந்து பார்ப்போமானால் மனித மனத்தில் இருந்து தான் எல்லாமே ஆக்கப்படுகின்றன. கேடுகள் கூட அப்படித்தான். இவை பூமியிலிருந்து முளைத்து வருவதுமில்லை. ஆகாயத்திலிருந்து பழுத்து விழுவதுமில்லை. பேராசை, சுயலாபம், பிறர் ஆக்கம் கண்டு பொறாமை முதலியவை கேடுகளை வளர்த்தெடுக்கின்றன.

மனம் அரியதொரு பாத்திரம். பாத்திரம் எப்பொழுதும் சுத்தமாக இருக்கவேண்டும். அதில் விட்டுப் பருகும் பால் எவ்வளவு தான் சுத்தமாக இருந்தாலும் பாத்திரம் அசுத்தமாகிவிட்டால் பாலும் நாசமாகிப் பருகியவரும் படு பாதிப்புக்குள்ளாகி விட நேரிடும். எல்லாக் காரியங்களுமே மனத்தாலாம் என்கிறார் திருவள்ளுவர். மேலும் அவர் மனத்தூய்மை பற்றிக் கூறுமிடத்து அதனை விளக்க வந்த பரிமேலழகர், இன்னும் ஒருபடி மேலே போய் நின்று விசேட உணர்வு புலப்படுமாறு இயற்கையாய் அறியாமையின் நீங்குதல் என்கிறார்.

மனம் தூயவராய் இருப்பவர்களுக்கு மக்கள் பேறும் நன்றாக ஆகும் என்பதோடு அமையாது மன் உயிர்க்கு மனத்தது நன்மை செல்வத்தையும் கொடுக்கும் என வலியுறுத்திக் கூறுகின்றார். மனிதனை நெறிப்படுத்தும் "மன"த்தை நெறிப்படுத்துவதும் மனிதனே என்பது தான் அதில் மிகவும் ஆச்சரியமான விஷயம். மனிதன் புனிதமான மனத்தோடு நற்குணசீலனாக வாழ்ந்தால் கலக்கமோ, கலகமோ இருக்க மாட்டா. அதற்கு இந்த மனதைக் கட்டிப்போட வேண்டும். மனதைக் கட்ட நல்ல நூல்களும், நல்லார் இணக்கமும், தியானமும், நல்லசூழலும், நல்ல பலமான கயிறுகளாக அமைகின்றன.

மன நெறிப்பட்டு வாழுகின்ற வாழ்க்கைதான் பூரண, நித்திய ஆனந்தத்தையும் கூடுதலான திருப்தியையும் பரம சௌக்கியத்தையும் முன்னேற்றத்தையும் தரும் - தரவல்லது. மேல் நாடுகளில் 'Mental Dicipline' ஒருபாடமாகவே இளவயதினருக்குப் பயிற்றுவிக்கப் படுகின்றது. இதன்மூலம் ஆரோக்கியமான ஓர் சமூக அமைப்பினை ஏற்படுத்தலாமென்பது உளவியல் நிபுணர்களின் கருத்து.

நெறிப்பட்ட மனம் நில் என்றால் நிற்கும். எக்கருமத்தையும் நிறைவாக நிறைவேற்றும். எல்லார்க்கும் இயன்ற செயல் இது. சுவாமி விபுலானந்த அடிகள் கூறுவது போல **"உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"** என்பதைப் புரிந்து கொண்டு மனத்தே அவரை இருத்தி விட்டோமானால் எல்லாமே சரியாய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணீர்மை

திருப்பதி இளம்பிறையாளன் அவர்கள்

நீர்மை - ஒப்புரவு, குணம், நிலைபரம், தண்மை, குளிர்ச்சி, தன்மை, இனிமை, நீருடமை, முறைமை -

இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும். பிங்குவந்தையார்

நீர்மை - ஒழுற்கான இயல்பு

இந்த நீர்மையைப் பெண்மையோடு இணைத்து ஔவையார் ஓர் பாடல் தந்துள்ளார்.

**தண்ணீர் நிலநலத்தால் தக்கோர்குணங் கொடையால்**
**கண்ணீர்மை மாறாக்கருணையால் - பெண்ணீர்மை**
**கற்பழியா ஆற்றல் கடல்சூழ்ந்த வையத்துள்**
**அற்புதமாம் என்றே அறி**

**நல்வழி 16**

தண்ணீரானது நிலத்தின் நல்ல தன்மையாலும், சான்றோருடைய குணமானது வறியோர்க்கு ஈவதாலும், கண்களின் குணமானது நீங்காத அருளினாலும், மாதர்களின் குணமானது திண்ணிய கற்புடமையினாலும், கடல் சூழ்ந்த உலகத்தில் வியக்கத் தக்க பெருமை உடையனவாகும் என்று நீ அறிவாயாக.

நீர்மையென்ற பிரயோகம் ஒவ்வொன்றுடன் இணையும்போது வெவ்வேறு பொருள்படினும் பெண்மையோடு சேருங்கால் பெண்ணின் திண்மையை, உறுதிப்பாட்டை அழுத்திப்பேசக் காணலாம் இத்திண்மை உடைபடாமல் பாதுகாப்பது பெண்ணின் உயரிய பண்பாகும். இக்கற்பு நிறையெனவும் வள்ளுவர் வாக்கிற் பயிலக் காண்கின்றோம். பெண்ணின் உயர்வு நிறையாற் கணிக்கப்படும். இந்த நிறை மாசுறாமற் பேணக் கடமைப்பட்டவள் பெண். பெண்ணீர்மை தரங்குறைய ஆணும் காரணியாம். எனவே பெண்ணிற்கு நாற்குணம் எவ்வளவு (அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு) இன்றியமையாததோ, ஆணுக்கு அறிவு, திறை, ஓர்ப்பு, கடைப்பிடி நான்கும் இன்றியமையாதனவாம். இதை உள்வாங்கிய பாரதி கற்பென்று பேசவந்தால் இருசாராரார்க்கும் கற்பொழுக்கம் பொது என எழுதிவைத்தான். பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்.

**கட்டளைக் கல் – உரைகல்**

**பெண்ணில் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்**

**குறட்பா 5**

**திண்மை கலங்கா நிலைமை**

**சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை**

**மேலது 57**

நிறை - நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபெண் எப்படி அமையவேண்டும் என்பதைச் சமணமுனிவர்கள் வாக்கிற் காணலாம்,

**கட்கினியாள் காதலன் காதல்வகை புனைவாள்**
**உட்கிடையாள் ஊர்நாண் இயல்பினாள் - உட்கி**
**இடன் அறிந் தூடி இனிதின் உணரும்**
**மடமொழி மாதராள் பெண்**

**384 நாலடியார்**

**பொழிப்புரை:-** கண்ணுக்கு இனிய தோற்றம் உடையவளாய்க் கணவன் விரும்பும் வகையின் தன்னை அழகு செய்பவளாய்த் தகவிலாத வற்றைச் செய்ய அஞ்சுபவளாய், ஊரார் கண்டு நாணும் உயர் தன்மையுடையவளாய்க் கணவனிடம் நாணியும் ஊடல் புரிந்தும் இனிதுண்டாக ஊடல் தெளிந்தும் மென்மொழிகூறும் நன்மகளே எனப்படுவாள். இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை. மடக்கொடியில்லா மனை பாழ் என்று பாடியவரும் அவ்வையாரே. பெண்ணின் பெருமையைப் பேசாத புலவோரில்லை. தெய்வத்திலும் மேலாகக் கணவனைப் பேணும் பெட்பு உடையவள் நினைத்ததெல்லாம் கைகூடும் என்பர். கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா எனக் கூறிப் பெண்மை காத்தாள் ஓர் பெண் அவ்வண்ணமே. தெய்வப்புலவர் திருவள்ளுவப் பெருந்தகையும் **"தெய்வந்தொழா அள் கொழு நன் தொழுதெழு வாள் பெய்யெனப் பெய்யும் மழை"** என்றார். இதன் சாரம் என்ன, கடவுளை வணங்காமல் கணவனையே தெய்வமாக எண்ணி காலையில் எழுந்து அவனைத் தொழுது வருபவள். 'பெய்' என்றால் மழை பெய்யும் என்பதாகும். இதற்கு வெவ்வேறு பொருளும் கூறுவர்.

இலக்கியங்கள் போற்றும் கண்ணகி, மண்டோதரி, சாவித்திரி, சகுந்தலை, நளாயினி, அகலிகை, அருந்ததி, மணிமேகலை போன்றவர்களும், சைவமும் தமிழும் பேணிய திலகவதியார், புனிதவதியார், மங்கையர்க்கரசியார், உலகமுள்ளவும் ஒளிவிளக்குகள்தான் அன்னை தெரேசா, நிவேதிகாதேவியார், சாரதாதேவி, அன்னை கஸ்தூரிபாய், போன்றவர்கள் காலமுள்ளளவும் நம் கலங்கரை விளக்கங்கள்.

சமுதாயக் கட்டமைப்பிலே பெண் முக்கியபாத்திரம். இல்லறம் நடத்தப் பெண்ணின் பங்களிப்பு நிறையத்தேவை. உலகெங்கும் மக்கட் சமுதாயத்திற் சம பங்கு பெண்கள்தான். பெண்ணினத்தால் உலகம் நடைபெறுகின்றது. இணை விழைச்சின் மூலம் மக்கட் செல்வங்களைக் கருவிலேதாங்கி திருவுடைய குழந்தை தனைப் பெற்று உலகைப் புரப்பவர் தாய்க்குலம். ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் என்பது குறள். ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனேயெனத்தாய் தாய் கூற்றாகச் சங்கச் சான்றோர் பாடினர். எதையும் தாங்கும் இதயம் தாய்க்கே உரிய தனித்துவக் குணம். ஒரு குடும்பத்தையே இயக்கும் ஆளுமை நிறைந்தவள் பெண். குடும்பஞ்சார் நலன்களைக் கட்டி வளர்த்து கடமை, நீதி, அன்பு, ஒப்புரவு, கண்ணோட்டம் என்பவற்றைக் கடைப் பிடிப்போர் பெண்ணினமே. இல்லற விளக்குகள் மட்டுமன்றி ஏதைபேதைகள், துறவிகள், ஞானிகள், பரதேசிகள், இல்லம் தேடி வந்தால் அவர்களை உபசரித்துப் புரப்போரும் அவர்களே. பெண்குழந்தைகளைத் தனிப்பட்ட கவனத்தோடும் வளர்க்கப்படல் ஓர் கலையாகும். ஒரு குடும்பப் பெண்ணாக இல்லறம் காக்கும் பெண்மணி புகுந்த வீட்டில் எல்லாரதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பையும், மரியாதையையும் பேணக்கூடியவளாக, இனசனம், உற்றார், உறவினரின் நல்லெண்ணங்களை தன் நடத்தையால் பெறக்கூடியவளாக எல்லாவற்றையும் கடந்து கல்வியில் நிறைகுடமாகத் திகழ வளர்க்கப்படும் பெண் ஒரு குல விளக்கேதான். இந்நீர்மையிற் பெண்ணினம் நாகரிகம், பண்பாடு, கலை, கலாச்சாரம் போன்றவற்றைப் பரம்பரை பரம்பரையாகக் காத்தும் வருவர் மகளிர்.

வெள்ளையர் காலத்திலே தமிழகப் பெண்கள் பற்றிப் பாரதியைப் பாடவைத்திருக்கின்றார்கள். புதுமைப் பெண்களை நாட்டிலே நடமாட விட்டவர் பாரதி. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்தியவர். புரட்சிப் பெண்களை உருவாக்கியவர். சுதந்திர உணர்வையூட்டியவர். எல்லாவற்றிக்கும் மேலாக ஆண்களோடு பெண்களும் சமானமாக வாழ்வழிந்த நாட்டிலே எனச் சுதந்தபள்ளுப் பாடினார். எனவே பெற்ற தாய், பேணிவளர்த்த தாயின் தாய், சின்னம்மா, பெரியம்மா, மனைவி, அக்கா, தங்கச்சி எல்லாமே தாய்க்குலத்தின் தகை சான்ற அன்னையர்களே எனப் பாடிய புதுமைப் புலவனும் அவனே.

**தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வமுண்டோ?**
**தாய் பெண்ணே யல்லளோ? தமக்கை தங்கை**
**வாய்க்கும் பெண் மகலெல்லாம் பெண்ணே அன்றோ?**
**மனைவியொருத் தியையடிமைப்படுத்த வேண்டித்**
**தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?**
**தாயைப் போலேபிள்ளை என்று முன்னோர்**
**வாக்குள தன்றோ? பெண்மை அடிமையுற்றால்**
**மக்களெல்லாம் அடிமையுற்றல் வியப்பொன்றாமோ?**

**சுயசரிதை தாய் மாண்பு 47**

இவ்வண்ணம் விழுமியம் மிக்க தாய்மை எத்தனையோ விதமான அல்லல்களையெல்லாம் அனுபவிக்கிறார்கள் என்பதையும் அனுபவபூர்வமாய்க் கண்ட பாரதியார்.

**பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் - மிகப்**
**பீழை இருக்குதடி தங்கமே தங்கம்**

எனப் பாடியுள்ளார். **கண்ணன் என் காதலன் 7**

பீழை - துன்பம், சங்கடம், பீடை, அரிட்டம்

எத்தனையோ விதமான ஹிம்சைகளை அனுபவிக்கும் பெண் கன்மம் பொறையிழந்து கண்ணீரும் கம்பலையுமாய் வாழ்வதை நாம் நேரிற் காண்கிறோம். கற்புக்கனலியான தன் மனைவியை விடுத்து பிற பெண்களை நேசிப்பதும் தினம்தினம் சொந்த மனைவியை இதயம் நோக வைப்பதும் யதாரத்தம். ஓர் ஆண் அக்காவையும் தங்கையையும் மணம் முடிக்கலாம் ஒரு பெண் அப்படிச் செய்தால் எவ்வளவு பழிச்சொற்களை, அவதூறுகளை ஏற்கவேண்டிவரும். பெண்ணினத்தின் நேர்மையையும் நீர்மையையும் நாம் போற்ற வேண்டும். வலிந்து பழி சொல்லக் கூடாது. இவர்கள் நயமில்லாத கயவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடுப்பதூ உம் உண்பதூ உம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண வற்றாகும் கீழ்**

**குறட்பா 1079**

இன்று பெற்றவளைப் போற்றாத பிள்ளைகள். சகோதரிகளைப் போணாத சகோதர்கள் மலிந்து போயினர். உலகெங்கும் வன்முறைக் கலாச்சாரம் மலிந்ததால் எத்தனையோ பெண்கள் கணவனை இழந்து கைமை நோற்கும் விதவைகள் ஆயினர். இவர்கள் ஆதரிப்பாரின்றி நைந்து, நொந்து வாழ்கின்றார்கள். இவர்களின் துயர் போக்க சைவசமுதாயம், தமிழ்ச்சமுதாயம் முன்னின்று உழைக்கவேண்டும். ஆலயங்களில் இலட்சோபலட்சம் செலவில் கோபுரம் கட்டுவதில் முனைகிறார்கள். பெரிய சித்திரத்தேர், மஞ்சம், கைலாயவாகனம் செய்து கொடுக்கிறார்கள். திருவிழாக்களை இடாம்பீகமாகச் செய்கிறார்கள். பாற்குட அபிடேகம், கோடி அர்ச்சனைக்குப் பஞ்சமில்லை. வெளிநாடுகளில் பசியில்லாதவர்களுக்கு அன்னதானம் ஆண்டவனுக்கு தங்கநகை. ஆசாரியாரும் உடம்பு சுமக்கும் அளவிற்கு தங்காபரணம். கொஞ்சம் சிந்திப்போம்.

**மக்கள் சேவையே மகாதேவன் சேவை**
**மக்கள் சேவையே மாதவன் சேவை**

**படமாடக் கோயில் பகவற்கு ஒன்றியில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே**

**- திருமந்திரம்**

ஆகவே சமுதாய நலம் பேணுவோம். அது ஆண்டவனுக்குச் செய்வதாகும்.

**சொந்தச் சகோதர்கள் துன்பத்திற் சாதல் கண்டும்**
**சிந்தை இரங்கா ரடி - கிளியே**
**செம்மை மறந்தாரடி.**

**- பாரதி**

*** *** ***


# சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்**
**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு**
**ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே**
**இப்புண்ணிய காரியத்துக்கு**
**ஒப்புதல் தாருங்கள்.**




**தொடர்புகளுக்கு:**
**ஆறு. திருமுருகன்**
தொலைபேசி
**021-222 6550**

**கண் வைத்திய நிபுணர்கள்:**
**Dr. ச. குகதாசன், 021-222 3645**
**Dr . சிவந்தா, 021-222 3149**
யாழ், போதனா வைத்தியசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து :-

# கண்ணில் இருந்த மீனாட்சி அம்மை

அருட்சகோதரி ஜதீஸ்வரி

**அன்பான பிள்ளைகளே!**

அன்பு வாழ்த்து! நலமாக இருக்கின்றீர்களா! எல்லோரும் நலமே வாழப் பிரார்த்தனை. அன்னை பராசக்தி எல்லா நலமும் தருவாள். "அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாம்" என்பது பாரதி வாக்கு.

முன்னொருகாலத்தில் மதுரையை ஆண்ட மலையத்துவசன் என்ற பாண்டிய அரசனுடைய மகளாக அன்னை பராசக்தி வந்திருக்கிறாள். அரசனுடைய யாகத்தில் மூன்று வயதுக் குழந்தையாக எழுந்து வந்து, வளர்ந்து இளவரசியாக எல்லா நற்கலைகளும் கற்று, மலையத்துவசன் இறந்தபின் மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டியர் நாட்டை ஆண்டிருக்கிறாள். மீனாட்சி என்ற பெயரில் உலவிய தடாதகையான அவளை மணம் செய்ய அழகிய மணவாளனாகச் சிவபிரான் கையிலையிலிருந்து வந்து அவளை மணந்து, சோமசுந்தரபாண்டியர் என்ற பெயருடன் மதுரையில் அரசாண்டிருக்கிறார். மனிதனாக வாழ்ந்து காட்டியிருக்கிறார். ஆதலாலே "தென்னாடுடைய சிவன்", தென்பாண்டி நாட்டான்" என்றும், "சிவனது ஊர் தென்பாண்டி நாடே" என்றும் மணிவாசகர் உறுதியாகச் சொல்லியிருக்கிறார். மதுரையிலே சோமசுந்தரப் பெருமானும், மீனாட்சி அம்மையும் கோயில் கொண்டிருக்கிறார்கள்.

பிற்காலத்தில் மதுரையில் இருந்து அரசாண்ட ஒருவர் திருமலைநாயக்கர் என்ற நாயக்க வம்ச அரசர். அவர் பழமையான மீனாட்சியம்மை கோயிலைப் புதுப்பித்து பல திருப்பணிகள் செய்தவர். அந்தத் திருப்பணிகளை மேற்பார்த்து, ஆலோசனை வழங்கியவர் நீலகண்டதீட்சிதர் என்ற மந்திரி. அவர் ஒரு உத்தமமான அந்தணர். தேவி உபாசகர். திருப்பணி நடந்த காலத்தில் நடந்த ஒரு அற்புதம் இது. சிற்பக் களஞ்சியமாக ஒரு புதுமண்டபம் எழும்பிக் கொண்டிருக்கிறது. மிகச் சிறந்த சிற்பாசாரியார் ஒருவர் தலைமையில் ஏராளமான சிற்பிகள் இரவு, பகல் பாராது வேலை செய்கிறார்கள். லயம் தவறாத உளிகளின் ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் புதிய கலாமண்டபத்தூண் ஒன்றில் அரசர் திருமலைநாயக்கரின் உருவச் சிலை கனகம்பீரமாக அமைந்திருந்தது. அதை அமைத்த தலைமைச் சிற்பி மிகவும் மகிழ்ந்தார். அவர் நினைத்தபடி தத்ரூபமாக அந்தச் சிலை அமைந்து விட்டது. அடுத்த தூணில் அரசியாரின் உருவத்தைச் செதுக்கத் தொடங்கினார். கிரீடம், கூந்தல், முகம், கழுத்து, தோள்கள், கைகள், உடற்பகுதி.......ம்......மிக நிதானமாக, மிக அவதானமாக, ஒருமுகப்பட்ட சிந்தனையுடன், தியான நிலையில் சிலையைச் செதுக்கிக் கொண்டிருந்தார் தலைமைச் சிற்பி. ஒரு ஓவியன் படந்தீட்டுவது போல அவர் கை உளி வெகுநேர்த்தியாக வேலை செய்கிறது. அரசியாரின் இடுப்பு, அடுத்துத் தொடைப்பகுதி........மேகலை, பட்டாடைச் சுருக்குகள் எல்லாம் கனகச்சிதமாக வந்து கொண்டிருந்தன அரசியின் இடது தொடைப்பகுதி உருவாகிக் கொண்டிருக்கும் போது எதிர்பாராமல் ஒரு கற்துண்டு பெயர்ந்து தெறித்து விழுந்தது. தொடையில் ஒரு பள்ளம்......சிற்பி திடுக்கிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது வாழ்வில் முதல்முறையாக ஒரு அதிர்ச்சி! சிலை பின்னப்பட்டு விட்டது. சிற்பி மனம் நொந்துபோனது. இனியென்ன செய்வது என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்ட அவர், இன்னொரு தூண் கல்லைத் தெரிவு செய்து மறுபடி முதலில் இருந்து மிக அவதானமாக அரசியின் உருவத்தைச் செதுக்கத் தொடங்கினான். சிலை இடுப்புப் பகுதிவரை மிக நன்றாக வந்துவிட்டது. மீண்டும் மீண்டும் மீனாட்சி அம்மையைத் தியானித்தபடி தொடைப்பகுதியைச் செதுக்குகிறார் சிற்பி. அதே இடது தொடை, முன் கல்துண்டு தெறித்த அதே இடம்.....ஆ! அதே அளவு கல்துண்டு சட்டென்று தெறித்துவிழ - அதே அளவு பள்ளம் - அதேஇடத்தில்! சிற்பி நடுங்கிவிட்டார். கை உளி நழுவி விழுந்துவிட்டது. இரு கைகளும் தலையைத்தாங்க, சோர்ந்து கால் தளர்ந்து நிலத்தில் உட்கார்ந்து விட்டார்.

அதே நேரம் மண்டபத்தை மேற்பார்வை செய்யும் நீலகண்டதீட்சிதர் அந்த இடத்துக்கு வந்தார். சிற்பியின் நிலைகண்டு பதறிவிட்டார். "என்ன நடந்தது ஐயா?" என்று துடித்துக் கொண்டு சிற்பியின் கையைப் பிடித்தார் சிற்பி நிமிர்ந்தார். அவரது கண்ணில் கண்ணீர் அருவிகள். தீட்சிதர் மேலும் கலங்கினார். "சிற்பியாரே! ஏன்? என்ன நடந்தது உங்களுக்கு..... உடல் நலமேதும்....?" என்று பதறினார். சிற்பியார் இருமுறையும் நடந்த அந்த நிகழ்ச்சியைச் சொன்னார். தனது திறமைக்கு ஏற்பட்ட களங்கம் இது என்று விம்மினார். தீட்சிதர் சிலையைப் பார்த்தார். சிற்பியையும் பார்த்தார். கண்களை மூடிச் சிலநிமிடம் மீனாட்சிஅம்மை திருவுருவைத் தியானித்தார். அவரது முகமும், கண்களும் மலர்ந்த வாழ்வில் முதன்முறையாக ஏற்பட்ட சோதனையில் துவண்டு நின்ற சிற்பியாரை மெல்லத் தழுவிக் கொண்டார். பின் கை கூப்பி வணங்கினார். "சிற்பியாரே! உங்களுடைய தவறு எதுவுமே இல்லை! இது அன்னை மீனாட்சியின் சித்தப்படி நடந்திருக்கிறது. நீங்கள் வருந்த வேண்டா! இதே சிற்பத்தைப் பூர்த்திபண்ணி உரிய இடத்தில் வைத்துவிடுங்கள்! கவலையே வேண்டாம். ம்.... வேலையைத் தொடருங்கள்!" என்று இனிமையாகக் கட்டளையிட்டுவிட்டுப் போய்விட்டார். தீட்சிதர் முதல்மந்திரி. அவர் சொல்லுக்கு மறுப்பு ஏது? சிற்பிவேலையில் கவனம் செலுத்த ஆரம்பித்தார்.

சிலநாட்கள் கழிந்தபின் ஒருநாள் அரசர் மண்டபத்தைப் பார்க்க வந்தார். தூண்சிற்பங்கள் அவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. ரசித்துப் பார்த்துக் கொண்டு வந்தவர் கண்கள் மகாராணியின் சிலையில் லயித்தன. மலர்ந்த முகமும், கண்களும் சிலைமேல் மொய்த்து நழுவிவந்து... ஆகா! அந்தப்பள்ளத்தில் நிலைகுத்தின! திடீரென திருமலைநாயக்கரின் முகம் கறுத்துக் கண்கள் சிவந்தன. கோபப் பார்வை சிலையிலிருந்து சிற்பிமேல் பாய்ந்தது. சிற்பி நடுங்கிவிட்டார். நடந்ததை நடந்தபடி சொல்லி, முதலமைச்சர் கட்டளைப்படியே தான் அந்தச்சிலையை அப்படியே வைத்ததை எடுத்துச் சொன்னார். அரசர் முகம் கற்பாறைபோல் இறுகியது. பெருமூச்சு வேகமாக வெளியேறிற்று. மிக வேகமாக அங்கிருந்து அரண்மனைக்குப் போய்விட்டார். சிற்பி திகைத்து நின்றார்.

தனியே போயிருந்து யோசித்த அரசர் மனம் கொந்தழித்தது. தீட்சிதரிடம் வெறுப்பும், குரோதமும், கோபமும் கொதித்து எழுந்தன. காரணம் என்ன தெரியுமா? அரசியின் இடது தொடையில் அதே இடத்தில் நியமாகவே ஒரு பள்ளம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியின் பெற்றோருக்கும், அரசருக்கும் மட்டுமே தெரிந்த அந்த விடயம் தீட்சிதருக்குத் தெரிந்தது எப்படி? கோபத்தின் உச்சியில் பற்களை 'நறநற' என்று கடித்த திருமலை நாயக்கர் உடனடியாக தன் மெய்க்காவலனை அழைத்தார். தீட்சிதரைக் கூட்டி வரும்படி அவசரமாக அறிவித்தார். அவனும் ஓடினான்.

அந்த நேரம் தீட்சிதர் தம்வீட்டுப் பூஜை அறையில் பூஜை முடித்துத் தியானத்தில் இருந்தார். காவலன் அழைக்கும் செய்தியை வேலையாள் விரைந்து வந்து சொன்னான். அதைக்கேட்ட தீட்சிதர் மீண்டும் கண்களைமூடி மீனாட்சிஅம்மையைத் தியானித்தார். நடந்த சம்பவங்கள் படம் போலத் தெரிந்தன. அரசரின் அந்தரங்க ஆவேசம் அவருக்கு விளங்கியது. மறுபடி அன்னையைப் பூஜித்துக் கற்பூர ஆரத்தியை ஏற்றி ஆரதி செய்தார். சுடரைக் கண்களால் தழுவிக் கண்களில் ஒற்றினார். அப்படியே அந்த எரிந்து கொண்டிருக்கும் கற்பூரக் கட்டிகளை கண்கள்மேல் கொட்டிக் கொண்டார். "அம்மா! மீனாம்பிகே! என்று கதறியபடி விழுந்தார். வெளியே நின்றவர்கள் கண்கள் அவிந்து கிடந்த அவரைத் தூக்கி வந்து படுக்கையில் வளர்த்தினர். தீட்சிதர் அரச பணியாளரைக் கூப்பிட்டார், "அரசர் எனக்குத் தரவிருந்த தண்டனையை எனக்கு நானே தந்துவிட்டேன் அரசருக்கு வீண்பழி வரக்கூடாது. நீ போய் அரசரிடம் இதைச் சொல்லிவிடு!" என்று அனுப்பினார். நடந்ததை அறிந்த அரசர் துடித்துப்போனார். தீட்சிதரிடம் ஓடி வந்தார். "தீர்க்க தரிசனம், இறைவனுடைய பரிபூரண அருட் செல்வம் பெற்ற தங்களைத் தண்டிக்க நினைத்த நான் மாபாவி. உங்கள் கண்களைப் பொசுக்கக் காரணமான நான் என் கண்களைத் தோண்டி எறியவேண்டும்" என்று கதறி அழுதபடி இடுப்பிலுருந்த குறுவாளை உருவிக் கண்களைத் தோண்டப்போன அவன் கைகளை இறுகப் பிடித்தார் தீட்சிதர். "அரசே! உங்கள் மீது தவறில்லை! சந்தேகப்படக் கூடிய சந்தர்ப்பம் உங்களுக்கு ஏற்பட்டது. என்மீது அன்னை மீனாட்சியின் கருணை இருப்பதும், நான் குற்றமற்றவன் என்பதும் உண்மையானால் அம்மை எனக்குக் கண்களைத் தரட்டும்" என்று சொல்லி விட்டு 'ஆனந்த சாகரம்' என்ற தோத்திரப் பாமாலையை உள்ளம் உருகிப் பாடி மானஸீகமாக மீனாம்பிகையின் பாதங்களில் சூட்டினார். குளிர்ந்த அருவிபோல அவர் வாயிலிருந்து பாடல் பொழிந்தது. கண்ணீர் பொழிந்தது. "தயை மயமான மீனாட்சித் தாயே! கருணைகூர்ந்து நீ உன் திருவடித் தாமரைகளைக் காட்டியருளினாலும் இந்தப் புண்ணாண கண்களால் அவற்றை இனி யான் பார்க்க முடியும்? என்ற கருத்துடன் அவர் பாடிக்கொண்டிருந்த போது கற்பூரத் தீயால் அவிந்து கருகிப்போயிருந்த அவரது கண்கள் இரண்டும் ஊனம் ஏதுமே இல்லாமல், முன்பைவிட அதிகப் பொலிவோடும், குளிர்ச்சியோடும், ஒளியோடும் காட்சி தந்தன.

தீட்சிதர்மீது சந்தேகப்பட்டு அவரைத் தண்டிக்க நினைத்த அரசன் இப்போ அவரது புனிதத் தன்மையை நேரில் கண்டு மனம் நடுங்கிக் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அரசபணியில் இருந்து விலகிய தீட்சிதர், திருநெல்வேலிக்குப் பக்கத்தில் பாலாமடை என்ற கிராமத்துக்குப் போய்விட்டார். பூஜை, பஜனை, தியானம், எழுத்து என வாழத்தலைப்பட்டார். சிவலீலாவர்ணம், சிவதத்துவரகஸ்யம், நீலகண்ட விஜய சம்பூ ஆகிய சிவபரமான நூல்களையும், 'முகுந்த மாலா' என்ற விஷ்ணு பெருமைபேசும் நூலையும் எழுதியவர் நீலகண்ட தீட்சிதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## துர்க்காதேவியின் திருத்தொண்டர்

**அமரத்துவமடைந்த திரு .வை. கணேசானந்தன்**

அவர்களுக்கு

# இதயஅஞ்சலி

துர்க்கையம்பாளின் பணிகளில் தன்னை முற்றாக அர்ப்பணித்து பல ஆண்டுகள் பணி செய்தவர் அமரர் திரு கணேசானந்தன் அவர்கள். இந்த ஆலயத்துக்கும் அமரருடைய குடும்பத்திற்கும் நீண்ட நெடிய தொடர்பு உண்டு. கோயில் எல்லையில் இருந்து நூறு யார் தூரத்தில் தனது இல்லத்தை அமைத்துக் கொண்டவர் இவர். இவருடைய தாயும், தந்தையும் ஊருக்கு உபகாரிகள். வறுமையினால் நலிவுற்ற அயலவர்களை இன்முகம் காட்டி வேண்டிய உதவிகளை ஆற்றிய பெருமை இவருடைய தாயாருக்கு உண்டு. தந்தையாரோ சிங்கப்பூர் ஓய்வூதியம் பெற்று வந்தார். எங்கள் ஆலயத்தின் ஆரம்பகால திருப்பணி வேலைகளுக்கு மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் பணம் திரட்டி வந்து உதவியவர் அமரரின் தந்தையார் வைத்திலிங்கம் அவர்கள். அமரர் கணேசானந்தன் அவர்களும் தொண்டு உள்ளம் படைத்தவர். கோயிலைக் கூட்டுவார், கழுவுவார், பூசைத்திரவியங்களை ஒழுங்காக்கிக் கொடுப்பார். இன்னும் பல கோயிற் கடமைகளைச் செம்மையாகச் செய்து உதவியவர் இவர். கடைசி ஆறுமாதங்கள் நோய்வாய்ப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் இடம்பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. என்றாலும் சுகம் வந்தவுடன் கோயிலுக்கு ஓடோடி வந்து பணி செய்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய தொண்டர்களின் ஆத்மா அம்பாளின் திருவடியிலே இடம்பெற்று விடும் என்பது எமது சமய நம்பிக்கை. அமரரின் மனைவி, மகன், சகோதரிமார் ஆகியோருக்கு ஆறுதல் கூறி அஞ்சலி உரையை நிறைவு செய்கின்றேன்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி. J.P**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரை

## அமரத்துவமடைந்த

# திருமதி. தம்பிராசா கணேஸ்வரி அம்மையாரின் நினைவுகள்

எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்தோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட ஒரு குடும்பம் அமரர் கணேஸ்வரி அவர்களின் குடும்பமாகும். இவருடைய தந்தையார், சகோதரர்கள், மைத்துனர்கள் அனைவரும் அம்பாளை வழிபட்டு பணிசெய்து உய்வு அடைந்தவர்கள் எனலாம். அந்த வழியிலே கணேஸ்வரி அம்மையாரும் எங்கள் தேவஸ்தானத்தில் அலுவலகப் பணிசெய்து பெருமை பெற்றவர். திருவாளர் தம்பிராசா அவர்களைத் திருமணம் செய்தபின்பு அலுவலகப் பணியிலிருந்து விலகியவர். என்றாலும் அல்லும் பகலும் அம்பாளையே வழிபட்டு வந்தவர். நேர்மையான போக்கும், கண்ணியமான பேச்சும், நிதானமான நடையும் கொண்ட ஒரு குடும்பம் இந்த அம்மையாரின் குடும்பமாகும். தந்தையார் சொக்கநாதர் மின் விளக்கு இல்லாத அந்தக் காலத்திலேயே கைவிளக்கோடு ஆலயத்துக்கு வந்து கடமைகள் பல புரிந்தவர். கோயில் நிர்வாகத்தின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக விளங்கிய அவருடைய மகள் கணேஸ்வரி அவர்களின் மறைவு எமக்குத் தாங்கொண்ணாத துயரத்தைத் தந்துள்ளது. கணவனார் தம்பிராசாவுடன் ஒவ்வொரு செவ்வாயும் வெள்ளியும் அர்ச்சனைப் பொருட்களோடு கோயிலுக்கு வந்து வழிபடுவார். அம்மையாரின் திடீர் மறைவினால் கோயில் சமூகம் முழுவதும் கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருக்கியது. என்ன செய்வோம். அம்பாள் தன் அடிக்கமலத்துக்கு அழைத்து விட்டாள். நாமும் வழியனுப்பி ஆறுதல் அடைவோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை புரிவோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி. J.P**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபிராமி அந்தாதி

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே.


## நயினாதீவு நாகபூசணி அம்மன்

சுந்தரமூர்த்திநாயனார் குருபூஜை தினம் : ஆடிச்சோதி

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவுஸ்ரேலியா மெல்போன் சிவ விஷ்ணு ஆலயம்

பிள்ளையார் நேர்ச்சைப் பதிப்பகம் நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org